
# திராவிடத்தால் வாழ்கிறோம்

926

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

133




`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்!

## மருத்துவ சேவையில் மகத்தான இலக்கு!





தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் இந்தியாவுக்கே முன்னோடி என்பதை நாம் அறிவோம். ஒன்றிய அரசின் தகவல்களும் தவிர்க்க முடியாமல் நமது மருத்துவ சாதனை களைப் பேசி வருகின்றன. தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனைகளிலும், உயர் மருத்துவச் சேவைகள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில், நமது அரசு மருத்துவக் கட்டமைப்பு பலமானது. ஏற்கெனவே, 'வருமுன் காப்போம்', 'நம்மைக் காக்கும் 48', 'இதயம் காப்போம்', 'நடப்போம் நலம் பெறுவோம்', 'இல்லம்தேடி மருத்துவம்' எனப் பல திட்டங்களை, நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வரிசையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், நம் அரசு அறிமுகப்படுத்தியுள்ள மற்றொரு மருத்துவ சேவைத் திட்டம்தான் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகள், பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

### முன்கூட்டியே மருத்துவப் பரிசோதனை

விளிம்புநிலை மக்கள், அடித்தள மக்கள், பழங்குடியினர் மற்றும் அன்றாடப் பணியினர் தங்களது உடல்நலனில் அக்கறை கொள்வ தில்லை. குறிப்பாக, உடல்நலப் பரிசோதனை செய்து கொள்வதில்லை. அரசு மருத்துவ மனைகளுக்கு தினசரி 7 லட்சம் பேர் புற நோயாளிகளாகவும், சுமார் 70 ஆயிரம் பேர் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மகப்பேறு சிகிச்சைகளுக்கு சுமார் 2 ஆயிரம் பேர் வரை வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களின் உடல்நலனை முன்கூட்டியே பரிசோதனை செய்துகொள்வதில்லை என்கின்றன மருத்துவத் தரவுகள். இந்த இடைவெளியை நிவர்த்தி செய்யவும், அனைவருக்கும் முன்கூட்டியே மருத்துவப் பரிசோதனை செய்யும் தொலை நோக்குடனும் தொடங்கப்பட்ட திட்டம்தான் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம்

ஆகஸ்ட் 02-ஆம் தேதி (02.08.2025) இந்தத் திட்டத்தை நம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்கள், சென்னை பட்டினப் பாக்கம் செயின்ட் பீட்ஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு முழுக்க, 1,256 இடங்களில் உயர்தர மருத்துவ மையங்களில் இந்தத் திட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

### 17 மருத்துவத் துறைகள்

17 சிறப்பு மருத்துவத் துறைகளை உள்ளடக்கி, முழு உடல் பரிசோதனை செய்துகொள்ளும் வகையில் திட்டம் செயல்படும்.

இந்தத் திட்டத்தில், புற்றுநோய் பாதிப்புகளை முகாம்களிலேயே கண்டறியும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கருப்பை வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் என்று பல்வேறு வகைகளிலான ஆண், பெண் என்று இரு பாலருக்குமான புற்று நோய் பாதிப்புகளைக் கண்டறிகின்ற சோதனைகள் செய்து கொள்ளலாம்.




பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல், மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெறுகின்றன.

இந்த மருத்துவப் பரிசோதனைத் தொகுப்புக்குத் தனியார் மருத்துவமனைகளில் சுமார் 15 ஆயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு மருத்துமனை களில்கூட முழு உடல் பரிசோதனை செய்வ தற்கு 4 ஆயிரம் ரூபாய் வரை செலவிட வேண்டிய நிலையில், 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தில் மக்கள் இலவசமாக அனைத்து பரிசோதனைகளையும் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

> மக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார் நம் முதலமைச்சர்.

### சனிக்கிழமைகளில்...

மாவட்டம்தோறும் இந்த முகாம் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் நடைபெறும். காலை 9 மணிக்குத் தொடங்கி, மாலை 4 மணி வரை நடைபெறும். எந்த இடத்தில் முகாம் நடைபெறவுள்ளது என்கிற விவரம் முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வந்த முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பணிகள், இனி, 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்' முகாம்களிலேயே ஏற்பாடு செய்யப்படும். புதிய பயனாளர்கள் எளிதாக முதலமைச் சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைவதற்கு இந்த மருத்துவ முகாம்களைப் பயன்படுத்தலாம்.

இந்த முகாம்களிலேயே மாற்றுத் திறனாளிகள் சான்றிதழும் பெறலாம். அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி கள், 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாம் களில் பரிசோதனை மேற்கொண்டு, அங்கேயே மாற்றுத்திறனாளி சான்றிதழ் பெறலாம்.

இந்த முகாம்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கோப்புகள் அனைத்தும், மருத்துவ சேவை பயனாளர்களிடத்தி லேயே வழங்கப்படும். இதன்மூலம் எதிர்காலத்தில் மேல் சிகிச்சை செய்துகொள்ளும் வகையில் இந்த ஆவணங்கள் அவர்களுக்குப் பயன்படும்.

ஓராண்டு காலத்திற்குப் பொதுமக்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பரிசோதனைகள் செய்யப்படவுள்ளன. குறிப்பாக, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மொத்தமாக 1,256 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, இலவசமாக மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளன.

திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய நம் திராவிட மாடல் நாயகர் அவர்கள், "அரசு மருத்துவச் சேவைகளைப் பெறுபவர்கள் நோயாளிகள் அல்ல; அவர்கள் மருத்துவப் பயனாளிகள் என்று அழைக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார். மக்களின் ஆரோக்கியத்தை யும் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார் நம் முதலமைச்சர். சமூகநீதி அரசின் தெளிவான இலக்குக்கு, 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட பயனாளிகள் அளிக்கின்றனர் நற்சான்று.

...சாதனை தொடரும்

## தமிழ்நாடு வழிகாட்டுகிறது!

சமீபத்தில், truecopythink.media என்ற மலையாள வலைதளத்தில் சிகாபுத்தீன் பொய்த்தும்கடவு என்ற மலையாள எழுத்தாளர் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், "வட இந்தியாவிலிருந்து பாய்ந்து வந்த ஆரியமயமாக்கலுக்கு எதிராக வியக்கத்தக்க வகையில் தாக்குப்பிடித்த மொழியாகத் தமிழ் உள்ளது. மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளில், சமற்கிருதத்தினைக் கலக்கவிடாமல் மிகக் கவனமாக விலக்கி வைத்தவர்கள் தமிழ்ப் பெருங்குடிகள். தமிழின் பழமையும் இலக்கிய வளமும் அந்த மண்ணின் பெருமைக்குரிய சின்னங்களாக, அரசியல் உந்து ஆற்றலாக இன்று வரையிலும் நிலைநாட்டப்பட்டுள்ளது. மலையாளத்திற்கும் ஆங்கிலத்திற்கும் அடுத்தபடியாக கல்வி நிலையங்களில் முதன்மைத் துணைமொழியாகக் கற்றுக்கொள்ள வேண்டியது தமிழ் மொழிதான்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டி, அலைபேசி, கணிப்பொறி, கணிப்பான், பகிரி என சமகால ஆங்கில கருவிகளுக்கும் தொழில்நுட்ப சொற்களுக்கும் கூட தமிழில் சரியான வார்த்தைகள் கண்டுபிடிக்கப்படுவது போல வேறு மொழிகளில் இல்லை என்றும், சிகாபுத்தீன் பொய்த்தும்கடவு குறிப்பிடுகிறார். தாராளமய உலகிலும் தனித்துவத்தோடு தமிழ் நிலைபெற்றதற்கு காரணம் பேரறிஞர் அண்ணா. 1968-இல் அவரால் கொண்டு வரப்பட்ட இருமொழிக் கொள்கை. அந்த இருமொழிக்கொள்கையை ஏந்தாத மாநிலங்களில் எல்லாம் இந்தி மட்டுமே மூன்றாவது மொழியாகப் புகுந்தது.

குறிப்பாக, 2021-ஆம் ஆண்டு, புதிய கல்விக்கொள்கையை இந்தியாவிலேயே முதன்முதலில் அமல்படுத்திய மாநிலம் கர்நாடகா. அதன் விளைவாக திணிக்கப்பட்ட இந்திப் பாடத்தில், 2024-ஆம் ஆண்டில் மட்டும் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் அங்கு தோல்வி அடைந்தனர். மாணவர்களின் எதிர்காலத்தை எண்ணி, பெற்றோர் விழி பிதுங்கி நின்றனர். தற்போதைய காங்கிரஸ் அரசு இதுகுறித்து ஆராய குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு, மும்மொழிக் கொள்கையை நீக்கிவிட்டு, இருமொழிக்கொள்கையை அமல்படுத்தலாம் என அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

தமிழ்நாட்டின் முடிவை, அரை நூற்றாண்டுகள் தாமதமாக கர்நாடகாவும் கேரளாவும் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளன.

காக்கப்படட்டும், அவர்களின் தனித்துவப் பண்பாடும்!

## ஃப்ளாஷ்பேக்



### கழக உணர்வைத் தூண்டும் படம்!



ஆ.நா.பார்த்திபன்

1960 - ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், வடச்சேரியில் எனது தந்தை ஆ.மு.நாராயணசாமி அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடந்தது. எனது தந்தை பச்சையப்பன் கல்லூரியில் படிக்கும்போது, அவருக்கு ஆசிரியராக இருந்தவர் நம் இனமானப் பேராசிரியர் அவர்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். மண விழாவுக்கு மன்னையார், கழக முன்னோடி கோ.செங்குட்டுவன் ஆகியோர் முன்னிலை வகித்துள்ளனர். எனது தந்தை 2010-ஆம் ஆண்டு மறைந்தார். அவரின் நினைவாக உள்ள இந்தப் படம் கழக உணர்வைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

– ஆ.நா.பார்த்திபன், 60-வது வட்டக் கழகச் செயலாளர், துறைமுகம் கிழக்குப் பகுதி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 1964-சென்னை மாநகராட்சி!

1964-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி தேர்தலில், 83 இடங்களில் போட்டியிட்டு, 49 இடங்களைக் கைப்பற்றியது கழகம். கழகத்தின் ஆதரவுடன் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை மாநகராட்சி மேயராகவும், ஏ.ஏ.கபாலமூர்த்தி துணை மேயராகவும் 16-3-64-இல் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131